(முழுப் பதிப்புரிமையுடையது) (All rights reserved)

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்**
**தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-04


# வினாத்தாள் - I

சுட்டெண்:- .......................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
  - **இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
  - **ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**
  - **செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**

---

(01) 

இக்கூட்டினுள் தரப்பட்டுள்ள குறியீடுகளில் இரண்டு குறியீடுகள் ஒரேயளவான தடவைகள் வீதம் இடம்பெற்றுள்ளன. அவ்விரண்டு குறியீடுகளும்,

(1)   (2)   (3) 

(02) பிள்ளையொன்று மாலை வேளையில் தெற்குத் திசைக்குப் பயணிக்கும்போது அப்பிள்ளையின் நிழல் விழுந்திருப்பது,


(1) பிள்ளைக்கு முன்னால்  (2) பிள்ளையின் இடது கைப்பக்கத்தில்
(3) பிள்ளையின் வலது கைப்பக்கத்தில்

(03) 2037 ஆம் ஆண்டு உரித்துடையது,

(1) 20 ஆம் நூற்றாண்டின் 4 ஆம் தசாப்தத்திற்கு  (2) 21 ஆம் நூற்றாண்டின் 3 ஆம் தசாப்தத்திற்கு
(3) 21 ஆம் நூற்றாண்டின் 4 ஆம் தசாப்தத்திற்கு


(04) விலங்குப் பண்ணையொன்றில் வளர்க்கப்படும் ஆடுகளின் தலைகளின் எண்ணிக்கையினதும் கால்களின் எண்ணிக்கையினதும் கூட்டுத்தொகை 45 ஆகும். அதன்படி, அப்பண்ணையில் வளர்க்கப்படும் ஆடுகளின் எண்ணிக்கை,

(1) 9  (2) 8  (3) 10

(05) 


முதலாவது தராசு சமநிலையானதாகும். அதன்படி, இரண்டாவது தராசு சமநிலையாவதற்கு B பக்கத்திற்கு வைக்கப்பட வேண்டிய நிறை,




(1)   (2)   (3) 

(06) 


இவ்வுருவிலுள்ள எண்களைக் கிடையாகவும் நிலைக்குத்தாகவும் கூட்டும்போது ஒரே விடை கிடைக்கும் வண்ணம் வட்டம் R இற்குப் பொருத்தமான எண்,

(1) 5
(2) 4
(3) 6

(07) பின்வரும் உருக்களில் இரண்டு உருக்கள் சகல விதத்திலும் சமனானவை. அதன்படி, வித்தியாசமான உருவைத் தெரிவு செய்க.

(1)   (2)   (3) 

(08) நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அவ்வெண்ணில் முதலாவது இலக்கம் நான்காவது இலக்கத்தின் மூன்று மடங்காகும். இரண்டாவது இலக்கத்தினதும் மூன்றாவது இலக்கத்தினதும் கூட்டுத்தொகை 12 ஆகும். அதன்படி, அவ்வெண்,

(1) 6742  (2) 9843  (3) 8752

kalvi.lk

(09)

| வாவிகள் | மலைகள் | P |
|---|---|---|
| கலா வாவி | பீதுருதாலகால | மகாவலி |
| மின்னேரியா வாவி | Q | களனி |

அருகேயுள்ள அட்டவணையில் P, Q ஆகிய கூடுகளுக்குரிய மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்ட விடை,


(1) P - நகரங்கள் , Q - சிகிரியா

(2) P - பிரதான வீதிகள் , Q - விக்டோரியா




(3) P - ஆறுகள் , Q - சிவனொளிபாத

(10) 40cm நீளம் கொண்ட கம்பியொன்றினால் அமைக்கப்பட்ட செவ்வக வடிவமொன்றின் அகலம் 8cm ஆகும். அதன்படி, அச்செவ்வக வடிவத்தின் நீளம்,

(1) 12cm (2) 10cm (3) 24cm

(11) 

ஒரேயளவான சிறிய சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதன் மூலம் இத்திண்மமானது அமைக்கப்பட்டுள்ளது. இத்திண்மத்தை அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்த்தால் புலப்படும் முறை,



(1)  (2)  (3) 

(12) நீர்த்தாங்கியொன்றில் 8 லீற்றர் நீர் உள்ளது. அதிலுள்ள துளை ஒன்றினால் மணித்தியாலத்திற்கு 500 மில்லிலீற்றர் நீர் வெளியேறும். அதன்படி, 4 மணித்தியாலங்களின் பின் நீர்த்தாங்கியில் மீதமாக இருக்கும் நீரின் அளவு,

(1) 4 லீற்றர் (2) 5 லீற்றர் (3) 6 லீற்றர்

(13) தரப்பட்டுள்ள பொருட்சோடிகளுள் முதலாவது பொருளைப் பயன்படுத்துவதற்கு இரண்டாவது பொருள் அவசியப்படாத பொருட்சோடியைத் தெரிவு செய்க.


(1) 



(2)  (3) 

(14) குடையொன்றின் விலை ரூபாய் 470.00 ஆகும். என்னிடம் ரூபாய் 180.00 உள்ளது. நான் மீதிப் பணத்தை ரமேஷிடமிருந்தும் தினேஷிடமிருந்தும் பெற்றுக்கொண்டேன். ரமேஷிடமிருந்தும் தினேஷிடமிருந்தும் நான் பெற்றுக்கொண்ட பணத்தை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,

(1) ரூபாய் 130.00, ரூபாய் 210.00 (2) ரூபாய் 160.00, ரூபாய் 140.00 (3) ரூபாய் 140.00, ரூபாய் 150.00



(15) A, B, C ஆகிய உருக்கள் வரையப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.




(1)  (2)  (3) 


(16) 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 29 நாட்கள் உள்ளன. 2016 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி புதன்கிழமையாகும். அதன்படி, 2016 ஆம் ஆண்டிலுள்ள புதன்கிழமைகளின் எண்ணிக்கை,

(1) 52 (2) 53 (3) 54

(17)  ஆகிய குறியீடுகளைப் பயன்படுத்தி NEED என்ற சொல் எழுதப்பட்டுள்ளது. அதற்கேற்ப  ஆகிய குறியீடுகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க சொல்லாக இருக்கக்கூடியது.


(1) **END** (2) **NON** (3) **PEN**

(18) ஒவ்வொரு வாகனத்தினதும் சக்கரங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள விடை,

(1) பேருந்து ⟶ துவிச்சக்கரவண்டி ⟶ புகையிரதம் ⟶ கார்

(2) புகையிரதம் ⟶ கார் ⟶ பேருந்து ⟶ துவிச்சக்கரவண்டி

(3) துவிச்சக்கரவண்டி ⟶ கார் ⟶ பேருந்து ⟶ புகையிரதம்

(19) 


இச்சதுர வடிவக் காணியைச் சுற்றி ஒன்றுக்கொன்று சமதூர இடைவெளியில் கம்பித்தூண்கள் நடப்பட்டன. காணியைச் சுற்றி நடப்பட்டுள்ள கம்பித்தூண்களின் எண்ணிக்கை 16 ஆகும். அதன்படி, இச்சதுர வடிவக் காணியை A திசையிலிருந்து பார்க்கும்போது காணக்கிடைக்கும் கம்பித்தூண்களின் எண்ணிக்கை,

(1) 6 (2) 5 (3) 4

(20)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 7 | 4 | 6 | 1 | 5 | 3 | 8 |

ஒன்றுக்கொன்று வேறுபட்ட இரு எண்களைக் கூட்டும்போது விடை 10 ஆக வரக்கூடிய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை,

(1) 4 (2) 3 (3) 5


(21) கங்காவிடம் ரூபாய் 2.00 நாணயக் குற்றிகள், ரூபாய் 5.00 நாணயக் குற்றிகள், ரூபாய் 10.00 நாணயக் குற்றிகள் என்பன சம எண்ணிக்கையில் உள்ளன. கங்காவிடம் உள்ள நாணயக் குற்றிகளின் மொத்த எண்ணிக்கை 6 ஆகும். அதன்படி, கங்காவிடம் உள்ள முழுப்பணத்தின் பெறுமதி,

(1) ரூபாய் 38.00 (2) ரூபாய் 32.00 (3) ரூபாய் 34.00


(22) பின்வரும் 1, 2, 3 ஆகிய சந்தர்ப்பங்களில் உருக்கள் வரையப்பட்டுள்ள கோலத்தின்படி, 4 ஆவது சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



**1 ஆவது சந்தர்ப்பம்**


**2 ஆவது சந்தர்ப்பம்**


**3 ஆவது சந்தர்ப்பம்**

..............................................
**4 ஆவது சந்தர்ப்பம்**

(1) 

(2) 

(3) 

(23) இரண்டு எண்களை ஒன்றையொன்று பெருக்கும்போது வரும் விடை 24 ஆகும். அதன்படி, அவ்விரண்டு எண்களினதும் கூட்டுத்தொகையாக இருக்கக்கூடியது,


(1) 11 (2) 12 (3) 13

(24) நான்கு வருடங்களுக்கு முன் கீதாவின் வயதினதும் சீதாவின் வயதினதும் கூட்டுத்தொகை 18 ஆகும். தற்போது கீதாவினதும் சீதாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை,

(1) 24 (2) 22 (3) 26

(25) என்னிடமிருந்த பேனைகள் ஒரு குவியலில் 4 வீதம் இருக்குமாறு குவியல்களாகப் பிரிக்கப்பட்டன. அதன் பின்னர், நான் அப்பேனைகளை ஒரு குவியலில் மூன்று வீதம் இருக்குமாறு குவியல்களாகப் பிரித்தேன். அதன்படி, என்னிடமிருந்த பேனைகளின் எண்ணிக்கை,


(1) 16 (2) 24 (3) 27


(26) 


இத்திண்மம் ஒரேயளவான கனவுருக்களை ஒன்றுடன் ஒன்று ஒட்டியதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இத்திண்மத்திலுள்ள கனவுருக்களின் மொத்த எண்ணிக்கை,


(1) 18 (2) 14 (3) 16

(27) புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் முதலில் தந்துள்ள திண்மத்தை அமைக்கக்கூடிய கார்ட்போர்ட் அட்டையைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 

(28) முதலில் தந்துள்ள மூன்று சொற்களுடனும் தொடர்புடைய மற்றுமொரு சொல்லைத் தெரிவு செய்க.

**பாம்பு , நத்தை , மண்புழு**

(1) உடும்பு (2) மயிர்க்கொட்டி (3) அட்டை


(29) பெட்டியொன்றிலுள்ள பந்துகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **மஞ்சள் நிறப் பந்துகள் - 9** | **நீல நிறப் பந்துகள் - 6** |
| **சிறிய மஞ்சள் நிறப் பந்துகள் - 3** | **பெரிய நீல நிறப் பந்துகள் - 4** |

அதன்படி, பெட்டியிலுள்ள மொத்தப் பந்துகளின் எண்ணிக்கை,


(1) 22 (2) 18 (3) 15

kalvi.lk

(30) 

ஒரேயளவான 27 சிறிய சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதன் மூலம் இப்பெரிய சதுரமுகி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இவற்றுள் முகங்கள் 3 மாத்திரம் வெளியே தெரியும் சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 8 (2) 6 (3) 4

(31) 




A பாத்திரத்தின் பருமன் B பாத்திரத்தின் பருமனைப்போல் இரு மடங்காகும். அதன்படி, A பாத்திரத்திலுள்ள அரிசியின் அளவு B பாத்திரத்திலுள்ள அரிசியின் அளவின் இரு மடங்காகும். இக்கூற்று,

(1) சரியானது (2) தவறானது (3) கூறமுடியாது

(32) "பண்டசாலை" என்பது,

(1) பண்டங்களைப் பாதுகாப்பாகச் சேமித்து வைக்குமிடம் (2) பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும் இடம்

(3) உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை விற்பனை செய்யுமிடம்

(33)  - இவ்வடிவத்தின் பெறுமானம் 40 எனின்,  - இவ்வடிவங்களின் மொத்தப் பெறுமானம்,

(1) 65 (2) 80 (3) 70

(34) சமனின் வயது 18 ஆகும். அனிலின் வயது சமனின் வயதை விட 6 வருடங்கள் அதிகமாகும். அதன்படி, இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை,

(1) 24 (2) 42 (3) 40

(35) ஒரு உண்டியலில் ரூபாய் 5.00, ரூபாய் 2.00 நாணயக் குற்றிகள் மாத்திரம் உள்ளன. அவற்றின் பெறுமதி ரூபாய் 33.00 ஆயின், உண்டியலில் இருக்கத்தக்க ரூபாய் 5.00 நாணயக் குற்றிகளின் அதிகபட்ச எண்ணிக்கை,

(1) 5 (2) 6 (3) 4

(36) 


இங்கு காணப்படும் சீசோ சமநிலையானது. அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்று,

(1) பிள்ளைகள் இருவரினதும் நிறைகள் சமமாகும்.

(2) தினேஷை விட கணேஷ் நிறை கூடியவன்.


(3) கணேஷை விட தினேஷ் நிறை கூடியவன்.

(37) நீலா புகைப்படம் ஒன்றைப் பார்த்து, "இப்புகைப்படத்தில் இருப்பவர் எனது பாட்டியின் ஒரே மகளாவார்" என்று கூறினாள். அதன்படி, அப்புகைப்படத்தில் இருப்பது நீலாவின்,

(1) அக்கா (2) அம்மா (3) தங்கை

(38) 100 இலிருந்து 112 வரையான எண்களை எழுதும்போது இலக்கம் 1 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை,

(1) 16 (2) 19 (3) 18

(39) 


இக்கூடுகளினுள் உள்ள உருக்களை ஏதோவொரு விதத்தில் கூட்டங்களாக்கும்போது வரும் விடை,

(1) C, D, H - A, E, I - B, F, G

(2) A, F, H - C, E, G - B, D, I

(3) G, I, B - E, A, F - C, D, H

(40) ஒரு மாதத்தில் வெள்ளிக்கிழமைகள், சனிக்கிழமைகள், ஞாயிற்றுக்கிழமைகள் என்பன ஐந்து வீதம் உள்ளன. அந்த மாதத்தின் முதல் நாள்,

(1) திங்கட்கிழமை (2) ஞாயிற்றுக்கிழமை (3) வெள்ளிக்கிழமை

kalvi.lk

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

தரம் ஐந்து மாணவர்களுக்கான

# முன்னோடிப் பரீட்சை - இல-04

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.

* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**(01) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

சின்னச் சின்ன பூக்கள் காற்றில் ஆடும் பூக்கள்
சிறிய வெள்ளைப் பூக்கள் கவிஞர் பாடும் பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள் கொத்துக் கொத்துப் பூக்கள்
களிப்பைத் தரும் பூக்கள் கொள்ளை அழகுப் பூக்கள்

(i) இப்பாடலில் வந்துள்ள அடுக்குமொழி ஒன்று தருக. ..........................................

(ii) இப்பாடலில் வந்துள்ள அடைமொழிச் சொல்லை எழுதுக. ..........................................

(iii) "மகிழ்ச்சி" என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ..........................................

(iv) இப்பாடலில் வந்துள்ள சினைப்பெயர் ஒன்றை எழுதுக. ..........................................

(v) கீழ்காலும் சுழியும் உள்ள ஒரு சொல்லை எழுதுக. ..........................................

**(02) பிராணிகளுக்கான ஆண், பெண் மரபுப் பெயர்களைக் கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துக.**

| | உயிரினம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| (i) | நாய் | .............................. | பெட்டை |
| (ii) | மான் | கலை | .............................. |

**(03) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் அறிவித்தலாயின் ( ✓ ) எனவும், அறிவுறுத்தலாயின் ( X ) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள்ளே அடையாளமிடுக.**

(i) தினமும் குறைந்தபட்சம் 6 மணித்தியாலங்களாவது உறங்குங்கள். (   )

(ii) முதலாம் தவணைக்கான பரீட்சைக் கட்டணங்களை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் செலுத்தவும். (   )

**(04) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை கூட்டினுள் இருந்து தெரிவுசெய்து வெற்றிடத்தில் எழுதுக.**

| வெண்ணெய்க்கட்டி , கல் , சிங்கம் |
|---|

(i) அன்னை தெரேசா .............................. போன்ற கடினமான மனங்களையும் தனது அன்பினால் இளகச்செய்தார்.

(ii) குற்றங்களைக் கண்டு பொறுமை இழந்த தலைவர் .............................. போல் கர்ச்சித்தார்.

(iii) குழந்தையின் கன்னங்கள் இரண்டும் .............................. போல மிருதுவாய் இருந்தன.

**(05) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு பழமொழிக்கும் உரிய கருத்தை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து வெற்றிடத்தில் எழுதுக.**

(விடாமுயற்சி பலன் தரும் , சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது , எதையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும்.)

(i) காற்றுள்ள போதே தூற்றிக்கொள் :- ..........................................

(ii) ஆழம் அறியாமல் காலை விடாதே :- ..........................................

(iii) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் :- ..........................................

**(06) அடைப்பினுள் தரப்பட்டுள்ள எழுத்துக்களைக் கொண்டு வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.**

( ந் , ல் , ட் , ள் , ங் , ச் )

(i) வல்லின எழுத்துக்கள் இரண்டினை எழுதுக. .................. (ii) மெல்லின எழுத்துக்கள் இரண்டினை எழுதுக. ..................

(iii) இடையின எழுத்துக்கள் இரண்டினை எழுதுக. ..................

kalvi.lk

**(07) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் தடித்த எழுத்துக்களிலுள்ள மரபுத் தொடரின் கருத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

நான் பரீட்சையில் சித்தியடைந்தமையை அறிந்த ஆசிரியர் **உச்சி குளிர்ந்தார்** :- ........................................................

**(08) "தூக்கம்" , "சூரியன்" ஆகிய இரு சொற்களிலும் இடம்பெற்றுள்ள "தூ" , "சூ" எனும் எழுத்துக்களிலுள்ள உயிர்க்குறிகளின் பெயர்களை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) ூ :- (மடக்கேறு , கீழ்க்காலும் சுழியும் , மடக்கேறும் அரவும்)

(ii) ு :- (கீழ்க்காலும் சுழியும் , மடக்கேறு , மடக்கேறும் அரவும் )

**(09) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) சிங்கராஜ வனத்தில் அதிகளவு மரங்கள் .......................... (உள்ளது / உள்ளன.)

(ii) கண்ணன் தென்னை மரத்திலிருந்து விழுந்த தேங்காயைப் .................................... (பொறுக்கினான் / பொறுக்கினர்)

**(10) பின்வரும் பாடலின் இரண்டாவது வரியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

மீனினம் ஓடிப் பரக்குதம்மா - ஊடே

..........................................................................................

வானுங் கடலாக மாறுதம்மா - இந்த

மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா.

**(11) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) Is this your pen ? :- ........................................................ (ii) I am reading a book :- ..................................................

**(12) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) I have three ......................... (brother / brothers) (ii) My cat ......................... (likes / like) milk.

**(13) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.**

(i) கட்டில் :- ............................................................ (ii) வானம் :- ............................................................

**(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

மட்ட படகினிய் :- ..........................................................................................................................

**(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

தேநீர் குடியுங்கள் :- ..........................................................................................................................

(16) பொது வித்தியாசம் 4 ஆகவுள்ள எண்கோலமொன்றை எழுதுக. ..........................................................................

(17) 7509 எனும் எண்ணை எழுத்துக்களில் எழுதுக. ..........................................................................................

(18) கீழே தரப்பட்டுள்ள உரோம எண்குறிக்கு முன்னாலுள்ள எண்ணையும், பின்னாலுள்ள எண்ணையும் உரோம எண்குறிகளில் எழுதுக. .................. , VIII , ......................

(19) கடையொன்றில் குறித்த ஒரு நாளில் காலையிலும் மாலையிலும் விற்கப்பட்ட தோடம்பழங்களினதும், அப்பிள் பழங்களினதும் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை எழுதுக.

| | தோடை | அப்பிள் |
|---|---|---|
| **காலை** | 70 | 45 |
| **மாலை** | 68 | 62 |

(i) அன்றைய தினம் அக்கடையில் விற்கப்பட்ட மொத்த அப்பிள் பழங்களின் எண்ணிக்கை யாது? ..........................................................................

(ii) அன்றைய தினம் காலையில் விற்கப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..........................................................

(20) பி.ப. 10.30 மணிக்கு சிலாபத்திலிருந்து புறப்பட்ட பேருந்து மு.ப. 1.30 மணிக்கு கொழும்பை வந்தடைந்தது. அதன்படி, பேருந்து சிலாபத்திலிருந்து கொழும்பை அடைவதற்கு எடுத்த நேரம் யாது? ..........................................

(21) ஒரு பாத்திரத்திலிருந்த தேங்காயெண்ணெயிலிருந்து $5l\ 400ml$ தேங்காயெண்ணெயை விற்ற பின், எஞ்சியிருந்த தேங்காயெண்ணெயின் அளவு $3l\ 600ml$ ஆகும். எனின், ஆரம்பத்தில் அப்பாத்திரத்திலிருந்த தேங்காயெண்ணெயின் அளவு யாது? ..........................................

(22) மாமரம் இருப்பது தென்னை மரத்திற்கு 6m 60cm தெற்குத் திசையிலாகும். கொய்யாமரம் இருப்பது மாமரத்திற்கு 8m 80cm வடக்குத் திசையிலாகும். அதன்படி, கொய்யாமரம் இருப்பது தென்னை மரத்திற்கு எவ்வளவு தூரத்திலாகும்? ..................

(23) தந்தை 876 ரூபாய்க்கு நான்கு மின்குமிழ்களை வாங்கினார். ஒரு மின்குமிழின் விலை யாது? ..........................

kalvi.lk

சுட்டெண்:-..........................................

(24) பிள்ளையொன்றிடம் 16 பேனைகள் உள்ளன. அவற்றில் $\frac{1}{4}$ சிவப்புப் பேனைகள் ஆகும். மீதிப் பேனைகள் நீல நிறமானவையாகும். அப்பிள்ளையிடம் உள்ள நீலப் பேனைகளின் எண்ணிக்கை யாது?. ..............................................


(25) கடையொன்றில் வைக்கப்பட்டிருந்த விலைப்பட்டியல் பின்வருமாறு தரப்பட்டுள்ளது. அவ்விலைப்பட்டியலின்படி, பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

**விலைப்பட்டியல்**

| | ரூபாய் | சதம் |
|---|---|---|
| 500ml மண்ணெண்ணெய் | 40 | 00 |
| 250g தேயிலை | 100 | 00 |
| 2 பேனைகள் | 40 | 00 |
| 1m ரிப்பன் | 20 | 00 |


| | பொருட்களின் வகைகள் | கொள்வனவு செய்த அளவுகள் | ரூபாய் | சதம் |
|---|---|---|---|---|
| (1) | தேயிலை | $\frac{1}{2}$kg | ........ | ........ |
| (2) | மண்ணெண்ணெய் | 1 $l$ | ........ | ........ |
| (3) | ரிப்பன் | ........ | 10 | 00 |
| (4) | | கூட்டுத்தொகை | ........ | ........ |

(26) 2 நாட்கள் 8 மணித்தியாலங்களை மணித்தியாலத்தில் எழுதுக. ..............................................

(27) (i) 

இக்கார்ட்போர்ட் துண்டைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் அமைத்துக் கொள்ளக்கூடிய திண்மத்தின் பெயரை எழுதுக. ..............................................

(ii) அமைத்துக்கொள்ளப்பட்ட திண்மத்திலுள்ள விளிம்புகளின் எண்ணிக்கை, முகங்களின் எண்ணிக்கையின் எத்தனை மடங்காகும்? ..............................................

(28) 

இக்கடிகார முகத்தினால் காட்டப்பட்டுள்ள நேரத்தின்படி, 7 கழிந்து 25 நிமிடங்கள் ஆவதற்கு இன்னும் எத்தனை நிமிடங்கள் உள்ளன? ..............................................

(29) ஒரு வகைப் பணியாரங்களைத் தயாரிப்பதற்கு 4kg 600g மா தேவை. வீட்டில் 1kg 900g மா மாத்திரம் உள்ளது. மேலும் எவ்வளவு மா தேவை? ..............................................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) தலையணை உறையில் பூவொன்றைத் தைப்பதற்கு மிகப் பொருத்தமான தையல் முறை,
(1) சங்கிலித் தையல் (2) வெட்டுக்குத்துத் தையல் (3) கம்பளித் தையல்

(31) இலங்கையின் பிரதான சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள இடம்,
(1) மத்தளை (2) ரத்மலானை (3) கட்டுநாயக்கா

(32) பண்டுகாபய மன்னனால் கட்டப்பட்ட வாவி,
(1) மின்னேரியா வாவி (2) அபய வாவி (3) கலா வாவி

(33) இலங்கை அமைந்திருப்பது இந்தியாவிற்கு,
(1) தெற்கில் (2) வடக்கில் (3) மேற்கில்

(34) "நாளை முதல் இலங்கையின் அனைத்துப் பாடசாலைகளும் மூடப்படும்" என்பதை அறிவிக்க மிகப் பொருத்தமான ஊடகம்,
(1) ஒலிபெருக்கி (2) செய்தித்தாள் (3) தொலைக்காட்சி

(35) இலங்கையில் வசிக்கும் அனைத்து இன மக்களுக்குமான பொதுவான விழா,
(1) சித்திரை வருடப்பிறப்பு (2) சுதந்திரதின விழா (3) வெசாக் பண்டிகை

(36) இலங்கையின் தேசியக் கொடியிலுள்ள செம்மஞ்சள் நிறப்பகுதி பிரதிநிதித்துவப்படுத்துவது,
(1) தமிழ் மக்களை (2) சிங்கள மக்களை (3) முஸ்லிம் மக்களை

(37) எமக்குப் பொருளாதார ரீதியான நன்மைகளை ஈட்டித்தரும் பிராணிகள்,
(1) தேனீ, பசு (2) நத்தை, மரவட்டை (3) தவளை, ஆமை


(38) கொழுகொம்பைப் பற்றிப் படரும் கொடியொன்றல்லாதது,
(1) புடோல் (2) பாகல் (3) வத்தகை

(39) அதிக மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்,
(1) கிழக்கு மாகாணம் (2) வட மாகாணம் (3) மத்திய மாகாணம்

(40) தேசியக் கொடி பற்றிய தவறான கூற்று,
(1) சுதந்திரதினக் கொண்டாட்டத்தின்போது தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்படும்.
(2) தேசியக் கொடியின் நீளம் அதன் அகலத்தைப் போல இரண்டு மடங்காகும்.
(3) தேசியக் கொடி ஏற்றிய பின் தேசிய கீதம் இசைக்கப்படும்.

(41) ஊனுண்ணிப் பறவைகள்,
(1) கிளி, காகம் (2) வெளவால், புறா (3) ஆந்தை, பருந்து

kalvi.lk

(42) 


இவ்வுருவில் தபால் பெட்டியொன்று காட்டப்பட்டுள்ளது. அதில் உருவில் காட்டப்பட்டுள்ளபடி, நேரங்கள் குறிக்கப்பட்டு இருந்தன. அந்நேரங்களால் கருதப்படுவது,

(1) தபால் பெட்டிக்கு கடிதங்கள் இட வேண்டிய நேரங்கள்.

(2) தபால் பெட்டியிலிருந்து கடிதங்கள் சேகரிக்கப்படும் நேரங்கள். (3) மேற்படி, இரு விடைகளும் சரியானவை.


(43) இலங்கையின் தேசிய அடையாளமொன்று அல்லாதது,

(1) நீலோற்பலம் (2) நாகமரம் (3) மயில்

(44) கடைகளில் கொள்வனவு செய்யப்படும் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் தரச்சின்னம்,

(1) SLS (2) SMS (3) ISO

(45) உலர் மின்கலம் ஒன்றிற்கு மின்குமிழ்கள் இரண்டு செப்புக் கம்பிகளினால் இணைக்கப்பட்டுள்ள முறையை உரு காட்டுகின்றது. அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.




(1) இரண்டு மின்குமிழ்களும் ஒளிரும்

(2) மின்குமிழ் A மாத்திரம் ஒளிரும் (3) மின்குமிழ் B மாத்திரம் ஒளிரும்

(46) பறக்க முடியாது ஆனால் வேகமாக ஓடக்கூடிய பறவை,

(1) மயில் (2) தீக்கோழி (3) கொக்கு

(47) இலங்கையின் ஒரே மாகாணத்திற்குரிய மாவட்டங்கள் இரண்டைக் கொண்ட விடை,

(1) அநுராதபுரம், பொலன்னறுவை (2) காலி, அம்பாறை (3) மன்னார், கண்டி

(48) பின்வரும் தையல் முறைகளில் அலங்காரத் தையல்,

(1) பெருநூலோடித் தையல் (2) சிறுநூலோடித் தையல் (3) கம்பளித் தையல்

(49) ஒலிம்பிக் கொடியில் காணக்கிடைக்கும் வட்டங்களின் எண்ணிக்கை,

(1) 4 (2) 5 (3) 6

(50) கீழே தரப்பட்டுள்ள பிராணிகளுள் பூச்சியினம் அல்லாதது,

(1) சிலந்தி (2) தேனீ (3) வெட்டுக்கிளி




(51) பின்வருவனவற்றுள் இலத்திரனியல் ஊடகம் அல்லாதது,

(1) வானொலி (2) தொலைக்காட்சி (3) பத்திரிகை

(52) மீன் டின் ஒன்றைக் கொள்வனவு செய்யும்போது நாம் கட்டாயமாகக் கவனிக்க வேண்டியது,

(1) உற்பத்தித் திகதி (2) காலாவதித் திகதி (3) விலை

(53) கீழே மின்காந்தங்கள் மூன்று காட்டப்பட்டுள்ளன. அவற்றில் அதிகளவிலான கவரும் தன்மையைக் கொண்ட மின்காந்தம்,

(1)  (2)  (3) 

(54) சுருங்கும் இலைகளைக் கொண்ட தாவரம்,

(1) கொஹில (2) ஆமணக்கு (3) தொட்டாற்சுருங்கி

(55) இலைக்கஞ்சி தயாரிப்பதற்குப் பொருத்தமான தாவர இலைகள்,

(1) கோப்பையிலை, மரவள்ளி (2) சாத்தாவாரி, முடக்கொத்தான் (3) ஆமணக்கு, எருக்கலை

(56) அகத்தி இலைகள் போன்ற வடிவத்தை கொண்ட தாவரம்,

(1) புளி (2) பசளி (3) பொன்னாங்கண்ணி


(57) 

இம்முறையிலான வாழிடத்தை அமைத்துக்கொள்ளும் பிராணி,

(1) பாம்பு (2) எறும்பு (3) கறையான்

(58) மே மாதம் பூக்கும் பூ வகையொன்று,

(1) முள்முருங்கைப் பூ (2) மே மலர் (3) கடதாசிப் பூ

(59) 

இவ்வகையிலான பந்து பயன்படுத்தப்படும் விளையாட்டு,

(1) ஹொக்கி (2) டென்னிஸ் (3) றகர்


**(60) "வீட்டில் பெற்றோரின் வேலைகளுக்கு உதவுவது நல்ல பழக்கமொன்றாகும்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..............................................................................................................................................

(2) ..............................................................................................................................................

(3) ..............................................................................................................................................

kalvi.lk




## தரம் 5

# புலமை வித்தகன்

தரம் 5 மாணவர்களிற்கான யாழ்ப்பாணம் R.PRASANTHAN (PRI.TRD) ஆசிரியர் எழுதிய புலமைவித்தகன் மாதிரி வினாத்தாள்கள்.

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY
( தபால்காரரிடம் விலை 1050/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

075 287 1457

BUY BOOKS

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page